VNR9SS

விருதுநகர் மாவட்டம்

அரையாண்டுப் பொதுத் தேர்வு - டிசம்பர் 2024

-----

# வகுப்பு 9

காலம்: 3.00 மணி | சமூக அறிவியல் | மதிப்பெண்கள்: 100

## பகுதி - I

**I. சரியான விடையைத் தேர்ந்தெடு:** **14×1=14**

1) பரிணாம வளர்ச்சி வரிசையில் நவீன மனிதனின் நேரடி முன்னோர் ............ ஆவர்.
அ) ஹோமோ ஹேபிலிஸ் ஆ) ஹோமோ எரக்டஸ்
இ) ஹோமோ சேபியன்ஸ் ஈ) நியாண்டர்தால் மனிதன்

2) சங்க காலத்தில் பயன்படுத்தப்பட்ட எழுத்துமுறை யாது?
அ) ஆங்கிலம் ஆ) தேவநாகரி இ) தமிழ்பிராமி ஈ) கிரந்தம்

3) கிரேக்கர்களின் மற்றொரு பெயர் ............ ஆகும்.
அ) ஹெலனிஸ்டுகள் ஆ) ஹெலனியர்கள்
இ) பீனிசியர்கள் ஈ) ஸ்பார்ட்டன்கள்

4) ............ பேரரசு நிறுவப்பட்டது தென்னிந்தியாவின் நிர்வாக நிறுவனக் கட்டமைப்புகளை மாற்றியது.
அ) பாமினி ஆ) விஜயநகரப் பேரரசு
இ) முகலாயப் பேரரசு ஈ) நாயக்கர்கள் ஆட்சி

5) பசிபிக் பெருங்கடல் எனப் பெயரிட்டவர் ............
அ) கொலம்பஸ் ஆ) அமெரிக்கோ வெஸ்புகி
இ) ஃபெர்டினான்ட் மெகல்லன் ஈ) வாஸ்கோடகாமா

6) பல மில்லியன் ஆண்டுகளுக்கு முன் இந்தியா ............ கண்டத்தின் ஒரு பகுதியாக இருந்தது.
அ) கோண்டுவானா ஆ) லாரேஷியா இ) பந்தலாசா ஈ) பாஞ்சியா

7) ............ புவியின் முக்கிய ஆற்றல் மூலமாகும்.
அ) சூரியன் ஆ) சந்திரன் இ) நட்சத்திரங்கள் ஈ) மேகங்கள்

8) உயிர்க்கோளத்தின் மிகச்சிறிய அலகு
அ) சூழ்நிலை மண்டலம் ஆ) பல்லுயிர்த் தொகுதி
இ) சுற்றுச்சூழல் ஈ) இவற்றில் எதுவுமில்லை

9) உலக அமைவிடத்தை கண்டறியும் தொகுதியில் (GPS) பயன்படுத்தப்படும் செயற்கைக் கோள்கள்
அ) 7 ஆ) 24 இ) 32 ஈ) 64

10) எந்த மொழியிலிருந்து 'டெமாகிரஸி' என்ற வார்த்தைப் பெறப்பட்டது?
அ) கிரேக்கம் ஆ) லத்தீன் இ) பாரசீகம் ஈ) அரபு

11) ............ கான நோபல் பரிசு கைலாஷ் சத்தியமூர்த்தி மற்றும் மலாலாவிற்கு கொடுக்கப்பட்டது.
அ) இலக்கியம் ஆ) அமைதி இ) இயற்பியல் ஈ) பொருளாதாரம்

12) ............ ஆகியவை ஒற்றை ஆட்சிமுறைக்கான உதாரணங்கள்.
அ) இங்கிலாந்து ஆ) அமெரிக்கா இ) இந்தியா ஈ) ரஷ்யா

13) ............ காலத்தில் இருந்த உள்ளாட்சி அமைப்புப் பற்றி உத்திரமேரூர் கல்வெட்டு தெரிவிக்கிறது.
அ) சோழர் ஆ) சேரர் இ) பாண்டியர் ஈ) பல்லவர்

14) இந்தியாவில் அதிகபட்ச சூரிய ஆற்றல் உற்பத்தி செய்யும் மாநிலம்
அ) தமிழ்நாடு ஆ) மேற்கு வங்காளம் இ) கேரளா ஈ) ஆந்திரப்பிரதேசம்

## பகுதி - II

**II. சுருக்கமான விடையளி: (ஏதேனும் 10)** **10×2=20**

15) சிகுராட்களின் முக்கியமான பண்புகளைக் கூறுக.

16) மும்மணிகள் (திரிரத்னா) - இச்சொல்லை விளக்கிக் கூறு.

17) புனித சோபியா ஆலயம் பற்றி எழுதுக.

18) ''பாஸ்டன் தேநீர் விருந்தின்'' முக்கியத்துவத்தைக் குறிப்பிடுக.
19) பசிபிக் நெருப்பு வளையம் பற்றி குறிப்பு வரைக.
20) உயிரினப் பன்மை என்றால் என்ன?
21) மழைப்பொழிவின் வகைகள் யாவை?
22) தொலை நுண்ணுணர்வு - வரையறு.
23) மக்களாட்சியின் அரசாங்க அமைப்பினைப் பற்றி கூறுக.
24) கிராம ஊராட்சிகளின் முக்கிய பணிகள் யாவை?
25) பொருளாதாரத்திலுள்ள மூன்று துறைகள் யாவை?
26) பண்டைய காலத்தில் பண்டமாற்று முறையில் பயன்படுத்தப்பட்ட பொருள்கள் யாவை?
27) வேறுபடுத்துக: கருவம் மற்றும் மேலோடு
28) இந்தியாவில் காணப்படும் ஏதேனும் நான்கு சுண்ணாம்புப்பாறை பிரதேசங்களை பட்டியலிடுக.

## பகுதி - III

**10×5=50**

**III. எவையேனும் பத்து வினாக்களுக்கு விடையளிக்கவும்:**
**(வினா எண் 42-க்கு கட்டாயமாக விடையளி)**

29) **கோடிட்ட இடங்களை நிரப்புக:**
   i) புத்தருக்கு ஞானோதயம் ஏற்பட்ட இடத்தில் கட்டப்பட்டுள்ள மஹாபோதி கோயில் இன்றும் ................ இல் உள்ளது.
   ii) மிகப்பரந்த புவிசூழ்நிலை மண்டலத்தை ............... என்கிறோம்.
   iii) இந்தியா ................ மக்களாட்சி முறையினைக் கொண்டுள்ள நாடாகும்.
   iv) கிராமங்களில் செயல்படும் உள்ளாட்சி அமைப்பு ............... ஆகும்.
   v) தமிழகத்திற்கு பெரும் நீர் ஆதாரமாக இருப்பது ............... பருவ மழையாகும்.
30) மனிதர்களின் வரலாறு பூமியின் வரலாற்றுடன் நெருங்கிய தொடர்பு உடையது - தெளிவுபடுத்துக.
31) கன்பூசியஸின் ஐந்து முக்கியமான கோட்பாடுகளை விளக்கிக் கூறு.
32) தமிழக வரலாற்றில் சோழர்களின் காலம் ஒரு உன்னத காலம் விளக்கு.
33) புவியியல்சார் கண்டுபிடிப்புகளின் விளைவுகள் குறித்து ஆராய்க.
34) புவி அமைப்பை விவரி.
35) சூழ்நிலை மண்டலத்தின் செயல்பாடுகளை எழுதுக.
36) உலக அமைவிடத் தொகுதியின் (GPS) பயன்களை விவரி.
37) அடிப்படைக் கடமைகள் என்றால் என்ன? அவற்றை எவ்வாறு உன் பள்ளி வளாகத்தில் செயல்படுத்துவாய்?
38) குழந்தைகளுக்கான உரிமைகளாக ஐ.நா. சபை அறிவித்துள்ளவை யாவை?
39) புதுப்பிக்கத்தக்க வளங்கள் மற்றும் புதுப்பிக்கத்தகாத வளங்கள் வேறுபடுத்துக.
40) இந்திய ரிசர்வ் வங்கியின் பணிகளை விவரி.
41) தமிழகத்தின் நீர் ஆதாரம் பற்றி விளக்குக.
42) **கீழ்க்கண்ட இடங்களை இந்திய வரைபடத்தில் குறிக்கவும்:**
   (i) அரிக்கமேடு (ii) மதுரை (iii) தேவகிரி
   (iv) கோழிக்கோடு (v) டெல்லி

## பகுதி - IV

**2×8=16**

43) **கீழ்கண்ட வினாக்களுக்கு விடையளி:**
   அ) புவியில் உள்ள நீர்வாழ் பல்லுயிர்த் தொகுதியை விவரி.

   **(அல்லது)**

   ஆ) வானிலை சிதைவு என்றால் என்ன? வகைப்படுத்துக.
44) **உலக வரைபடத்தில் கீழ்கண்ட இடங்களை குறிக்கவும்:**
   (i) ஆர்டிக் பெருங்கடல் (ii) ஆசியா
   (iii) இந்தியப் பெருங்கடல் (iv) பூமத்தியரேகை
   (v) சீனா (vi) மொகஞ்சதாரோ
   (vii) இத்தாலி (viii) எகிப்து

------------